[1998 மே 5

முதலமைச்சர் இந்த அவையிலே உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள். அதற்கு ஏற்ப, அரசு ஏதாவது திட்டம் போட்டு, பனை வாரியம் அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா? அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால், இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு, பனைத் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, ஒரு வாரியம் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த வாரியத்தை உருவாக்கினார்களே தவிர, அதற்குண்டான திட்ட மதிப்பீடுகள் செய்து, அதைச் செயல்படுத்துவதற்குண்டான அலுவலர்கள் சரியான முறையில் நியமிக்கப்படவில்லை. ஆனால், கழக அரசு வந்ததற்குப் பிறகு, மும்பை கதர் ஆணைக் குழுவிலிருந்து பெறப்பட்ட ரூபாய் 1 கோடி நிதி உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்து, இன்றைக்கு நல்ல முறையிலே அதைச் செயல்படுத்துவதற்குண்டான ஆர்வம் உள்ள அலுவலர்களைப் போட்டு, இப்போது அது செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 440, திரு. செங்கை சிவம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**440—**

**மீன் வளம் குறைவதைத் தடுத்தல்**

***10906—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளம் குறைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளம் குறைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.